தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 23 ஜனவரி 2023 கனி 2




ஆசிரியர்
B. அர்ஜுன

MONTHLY

THE WORD OF CHRIST


கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 37
தலைப்பு : சொப்பனம் – Dream
வேத வாசிப்பு : ஆதி.37:1-10



1. தேவன் சொப்பனத்தில் - எண்.12:6
2. யோசேப்பு ஒரு சொப்பனம் - ஆதி.37:5
3. சொப்பனங்களைக் குறித்த எச்சரிப்பு - பிர.5:3




மாத இதழுக்கான
சந்தா செலுத்த இரு வழிகள்

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

Contact Us: 94435 58041

the word of christ இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்
YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509









**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 23 ஜனவரி – 2023 கனி – 2


ஆசிரியருரை

## இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு
## Wait On Your God Continually



**இ**ப்புத்தாண்டில் இது உங்களுடைய தீர்மானமாய் இருக்கட்டும். இடைவிடாமல் உன் தேவனாகிய கர்த்தரை நம்பிக்கொண்டிருக்கும்போது கர்த்தர் பெரியகாரியங்களை உங்களில் செய்வார். தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலருக்கு, கர்த்தர் தீர்க்கதரிசியாகிய ஓசியா மூலமாக பேசும்போது; "இப்போதும் நீ உன் தேவனிடத்தில் திரும்பு; தயவையும் நியாயத்தையும் கைக் கொண்டு, இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு" என்று (ஓசியா 12:6). இந்நாட்களில் ஜீவிக்கிறதான நீங்களும், நானும் இஸ்ரவேலின் தேவனை நாம் இடைவிடாமல் நம்பும்போது வாக்குமாறாத தேவன் நம்முடைய வாழ்க்கையிலும் பெரிய காரியங்களைச் செய்வார். முதலாவது தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது என்னவென்றால்; **நாம் தேவனிடத்திற்கு திரும்பவேண்டும்.** தேவனிடத்திற்கு திரும்பாமல் ஒரு ஆசீர்வாதத்தையும் அவருடைய சமுகத்தில் பெற்றுக்கொள்ளமுடியாது.

நினிவேயின் ஜனங்கள் மனந்திரும்பும்படியான ஒரு வாய்ப்பை தம்முடைய தீர்க்கதரிசியாகிய யோனா மூலமாக நினிவேயின் ஜனங்களுக்கு கொடுத்தார். அப்பொழுது இருந்த ஜனங்கள் யோனாவின் மூலமாக கொடுக்கப்பட்ட தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தைக்குச் செவிகொடுத்து உடனே இரட்டுடுத்திக்கொண்டார்கள். "அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்" என யோனா 3:10-ம் வசனத்தில் படிக்கிறோம். நினிவேயின் ஜனங்களும், அந்த ராஜாவும் மனந்திரும்பும்போது தேவன் அவர்களை மன்னித்து அந்தப்பட்டணங்களை அழிக்காது காத்து அவர்களை இரட்சித்தார். இன்றைக்கு நாமும் தேவனுடைய சத்தம்கேட்டு அவரிடத்திற்கு மனந்திரும்பும்போது நாமும் மன்னிப்பை அவருடைய சமுகத்தில் பெற்றுக்கொள்ளுவோம். ஆகையால் இவ்வருட துவக்கத்தில் நீங்கள் உங்களை முழுவதுமாக ஆண்டவருடைய சமுகத்தில் ஒப்புக்கொடுங்கள். உங்களுடைய பொல்லாத வழியை விட்டு தேவனிடத்திற்கு திரும்புங்கள்.

இயேசு சொல்லும் ஒரு உவமையில் மனந்திரும்பிய ஒரு இளைய மகனைக்குறித்து லூக்கா 15:20-ம் வசனத்தில் படிக்கிறோம். அவன் "எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்" என்று வாசிக்கிறோம். மனந்திரும்பிய இளைய மகனை அவன் கண்டுகொள்ளாமல் இல்லை. மனந்திரும்பி வந்த அவனை அவன் அன்போடு ஏற்றுக்கொண்டு அவனுக்குவேண்டிய வஸ்திரங்களை தரித்து, அவனுக்கு மோதிரத்தையும், அவன் கால்களுக்கு பாதரட்சைகளையும் போட்டு, கொழுத்த கன்றை அடித்து சந்தோஷமாயிருந்தான். அதைப்போல மனந்திரும்புகிற எந்த ஒரு மகனையும்

மகளையும் கர்த்தர் தம்மிடம் சேர்த்துக்கொள்ளும்படியாக ஆவலாக உள்ளார். நீங்கள் தேவனிடத்திலிருந்து பிரிந்துபோன ஒரு மனிதனாக இருக்கிறீர்களா? இன்றைக்கு தேவனிடத்திற்குத் திரும்புங்கள். நீங்கள் இழந்துபோன ஆசீர்வாதங்களை இவ்வருடத்தில் திரும்பவும் பெற்றுக்கொள்ளுவீர்கள்.

**இரண்டாவது தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டிரு:** தேவனிடத்தில் திரும்பிய நீங்கள் மீண்டும் பாவியாகவே வாழ்ந்துகொண்டிருப்பதை தேவன் விரும்பவில்லை. அவருடைய சமுகத்தில் தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு நடக்கவேண்டும். தேவன் இரக்கமுள்ளவராயிருக்கிறார். அவருடைய இரக்கத்திற்கு அளவே இல்லை. அவைகளைக்குறித்து நாம் வேதத்தில் படிக்கிறோம். முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்த எஸ்றா என்ற தேவனுடைய மனுஷன் "கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும் எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்" (எஸ்றா 7:10). நீங்கள் இந்த எஸ்றாவைப்போல உங்களுடைய இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருக்கிறீர்களா? நம்முடைய இருதயம் பக்குவப்படும்போது தேவனுடைய தயவையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ளுவோம். அவருடைய சமுகத்தில் இரக்கத்தைப் பெற்ற நாம் மற்றவர்களுக்கு இரக்கம் பாராட்டவேண்டும். நியாயமில்லா இந்த உலகத்தில், நியாயத்தையும் தயவையும் கைக்கொண்டு நடக்கவேண்டும். என்னதான் நியாயமாக நடந்தாலும் அக்கிரமக்காரர்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லையே என்று நீங்கள் அங்கலாய்ப்பீர்களானால் உங்களுடைய பெலன் குறுகினதாயிருக்கும்.

முற்பிதாக்களின் நடபடிகளை நாம் திரும்பிப்பார்க்கவேண்டும். எஸ்றாவைப்போன்ற அநேக தேவனுடைய தாசர்கள் வேதத்தை முக்கியப்படுத்தி அதன்படி நடக்கவும், அதன்படி செய்யவும் தங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறதை நாம் பார்க்கிறோம். வேதத்தை நேசிக்கிறவர்களை கர்த்தர் நேசிப்பார். நாம் வேதத்தை நேசிக்கும்போது நம்முடைய இருதயம் பக்குவப்படும். நாம் தேவனுக்கு ஏற்றவர்களாவோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; "ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத்தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவு கிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய்" என்கிறார் (ரோமர் 11:22). நாம் ஒலிவமரத்தில் ஒட்டவைக்கப்பட்ட கிளைகளாயிருக்கிறோம். தேவன் இஸ்ரவேலில் கண்டிப்புள்ளவராயிருந்தார். நம்மிடத்தில் தயவையும் இரக்கத்தையும் காண்பித்திருக்கிறார். அந்தத்தயவை நினைத்துப்பார்த்து நிலைத்திருக்கவேண்டும். நிலைத்திருந்தால் அந்த இரக்கம் நமக்கு உதவிடும். நிலைத்திராவிட்டால் ஆகாத கிளைகளை வெட்டிப்போடுவதுபோல நம்மையும் வெட்டிப்போடுவார். நாமும் தள்ளுண்டுபோவாம். ஆகையால் "சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவமரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியாயிருந்தாயானால், நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள். நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கிளைகள் முறித்துப்போடப்பட்டதென்று சொல்லுகிறாயே. நல்லது, அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப்போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. சுபாவக்கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு" என்கிறார் (ரோமர் 11:17-21). இந்த எச்சரிப்பின் சத்தம் வேதாகமத்தில் தொனித்துக்கொண்டேயிருக்கிறது. எச்சரிப்பின் சத்தம் கேட்டு தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு நடவுங்கள்.

**மூன்றாவதாக இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு** என்று ஓசியா 12:6-ல் வாசித்தோம். ஆம், நாம் இடைவிடாமல் தேவனை

நம்பிக்கொண்டிருக்கவேண்டும். உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது? இன்று இருந்து நாளை அடுப்பிலே போடப்படும் புல்லைப்போல உங்களுடைய நம்பிக்கை இருக்கக்கூடாது. கன்மலையின் மேல் அஸ்திபாரம்போடப்பட்டவர்களாக இருந்துகொண்டு உங்கள் தேவனை இடைவிடாமல் நம்பிக்கொண்டிருக்கவேண்டும். சங்கீதக்காரன் சொல்லுகிறான்; "நான் கர்த்தரை நோக்கி; நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்" என்கிறார் (சங்.91:2). அந்த சங்கீதம் முழுவதும் அவருடைய நம்பிக்கையை நாம் காணமுடிகிறது. தேவனே நம்முடைய நம்பிக்கையும் அடைக்கலமுமாயிருக்கிறார். அவரை நம்பிக்கையாக கொண்டவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போனதில்லை. தாவீதை தேவன் பெலப்படுத்தினார். ஆடுகளின் பின்னே சென்ற அவனை அழைத்து தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலை வழிநடத்தும்படியாக தெரிந்துகொண்டார். அவரை சார்ந்துகொண்டு அவருடைய ஆலோசனைகளைப் பெற்று இஸ்ரவேலை அற்புதமாக வழிநடத்திக்கொண்டு வந்தான். அவனுடைய ராஜ்யபாரத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார். அவனுடைய ராஜ்யபாரத்தில் ஜனங்கள் நிம்மதியோடிருந்தார்கள். அவனுடைய ராஜ்யபாரத்தில் தேவன் அவனுக்கு வெற்றியைக் கட்டளையிட்டார். அவர்களுக்கு தேவன் அரணும்கோட்டையுமாக இருந்தார். அவருடைய சமுகம் அவர்களைவிட்டு பிரியாதிருந்தது. தாவீது தன்னுடைய நாட்களில் அதிகமாக தேவசமுகத்தையே நாடினார். அப்படியென்றால்; இடைவிடாமல் தன் தேவனை நம்பிக்கொண்டிருந்தார் என்றே சொல்லலாம்.

அப்போஸ்தனாகிய பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின கடிதத்தில் "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" என்று எழுதுவதை வாசிக்கிறோம் (1தெச.5:17). தேவனுக்கும் நமக்கும் இடைவெளி வந்துவிடாது ஜெபிக்கிறவர்களாக இருக்கவேண்டும். சிலர் சிலருடன் பேசுவதில்லை. அதற்கு காரணம் என்ன? அவர்களுக்குள் ஏதோ கருத்துவேறுபாடு அல்லது ஏதோ பிடிக்காத சில செயல்பாடுகள் ஏற்பட்டு இருவரும் பிரிந்து விட்டனர் என்று சொல்லப்படுவதை கேள்விப்படுகிறோம். தேவனுக்கும் நமக்கும் இடையில் பிரிவு என்பது உண்டாகவே கூடாது. அப்படி உண்டாகுமானால் நாம் தேவனுக்கு ஏற்காத ஏதோ சில காரியங்களை செய்திருக்கிறோம். ஆகையால் ஜெபம் தடைபட்டுவிட்டது என அறிகிறோம். இடைவிடாமல் ஜெபத்தில் நிலைத்திருக்கிறோம் என்றால்; நாம் கேட்டவைகளை பெற்றுக்கொள்ளுகிறோம். தேவன் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு அதற்குச் செவிகொடுக்கிறார். நாமும் அவருடைய வார்த்தைகளைக் கேட்டு அதன்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறோம். தேவன் அந்த வாழ்க்கையை பார்த்து ஆசீர்வதிக்கிறார். இது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. இடைவிடாது ஜெபத்தில் தரித்திருப்பதற்கு வழியாகவும் இருக்கிறது.

சிமியோன் என்றவன் இஸ்ரவேலின் ஆறுதல்வரக் காத்திருந்தான். அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும் இருந்தான் அவன்மேல் பரிசுத்த ஆவி இருந்தார் என லூக்கா 2:25-ல் காண்கிறோம். இவனுடைய நம்பிக்கை வீண்போகவில்லை. ஆறுதலின் தேவனை தன்கைகளில் ஏந்திக்கொண்டு கர்த்தரை ஸ்தோத்திரித்தான். இடைவிடாது கர்த்தர் மீது நம்பிக்கையுள்ள ஒரு மனுஷனாக இருந்தான். இவ்விதமாக ஜீவிப்பவர்கள் இன்றும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நீங்கள் இவர்களைப்போல ஆசீர்வதிக்கப்பட இடைவிடாது உங்கள் தேவனை நம்பிக்கொண்டிருங்கள்.

**தானியேலின் பக்தி எப்படிப்பட்டதாயிருந்தது?**

தானியேலைப்பற்றி அறியாதவர்களே இருக்கமுடியாது. அவன் தரியுவின் ராஜ்யபாரத்தில் வாழ்ந்தவனாயிருந்தான். அவனுடைய பக்தியைப்பற்றி தரியுவின் ராஜ்யபாரம் எங்கும் பேசப்பட்டது. தரியு ராஜாவும் அவனுடைய பக்தியை அறிந்திருந்தான். ஒரு முறை தானியேல் குற்றஞ்சாட்டப்பட்டு சிங்கங்களின் கெபியில் அடைக்கப்பட்டான். அவர் ஒரு குற்றமும் செய்யவில்லை. எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினமும் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழுங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்திவந்தான். இந்த குற்றத்திற்காக அவன் சிங்கங்களின் கெபியில் அடைக்கப்பட்டான்.

சிங்கங்களை உண்டாக்கின கர்த்தர் ஒரு குற்றமும் செய்யாத தானியேலை சிங்கங்கள் கடித்துவிடாதிருக்க சிங்கங்களின் வாய்களை கட்டிப்போட்டார். தரியு ராஜாவோ இராமுழுதும் போஜம்பண்ணாமலும், கீதவாத்தியம் முதலானவைகளைத் தனக்கு முன்பாக வரவொட்டாமலும் இருந்து காலமே கிழக்கு வெளுக்கும்போது சிங்கங்களின் கெபிக்குச் சென்று "தானியேலே, ஜீவனுள்ள தேவனுடைய தாசனே, நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைச் சிங்களுக்குத் தப்புவிக்க வல்லவராயிருந்தாரா என்று கேட்டான். அப்பொழுது தானியேல் ராஜாவே, நீர் என்றும் வாழ்க" என்று சொன்னான் (தானி.6:20,21). தானியேலின் பக்தியினால் தரியுவின் ராஜ்யபாரம் எங்கும் கர்த்தரை அறிந்து கொண்டு இடைவிடாமல் கர்த்தரை ஆராதித்தனர். உங்களுடைய பக்தியும் அப்படியாக இருக்கட்டும்.

# சிந்தனைக்கு மாத்திரமே!

**"அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" (ரோம.16:17).**

*இன்றைக்கு ஏறக்குறைய அனைத்து பகுதிகளிலும் நாம் இந்த பிரச்சனைகளை பார்க்க முடிகிறது, இதற்கு சில காரணங்கள் உண்டு.*

*1. உள்ளூரிலேயே இருக்கிற சில ஊழிய சகோதரர்களை நாம் செய்தி கொடுக்க பிராந்திய சபைக்குள் அழைக்கிறோம். அவர்கள் சபையானது பக்திவிருத்தியடையும்படியும், கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும்படியும் போதிக்க வேண்டும். மாறாக இங்கே அதிருப்தியாக மற்றும் பெலவீனமாக யாரெல்லாம் இருக்கிறார்களென்று கவனித்து அவர்களில் சிலருடைய தொலைபேசி எண்களை வாங்கி இடைப்பட்ட நாட்களில் அந்த சபையின் ஊழியருக்கோ அல்லது சபையாருக்கோ தெரியாமல் அந்த விசுவாசியின் வீட்டுக்கே சென்று தங்களின் வழக்கமான ஆடுதிருடும் வேலைகளில் ஈடுபடுகின்றனர்.*

*2. கிறிஸ்துவின் சபையின் பிற இடங்களில் நடக்கும் கருத்தரங்கம், சிறப்புக் கூட்டம் நற்செய்தி கூட்டம், வாலிபர் கூட்டம் இப்படி நடக்கிற பகுதிகளில் நாம் நமது சபையார் பெலப்படும்படியும் கூட்டத்தை நடத்துகிற சபையை உற்சாகப்படுத்தலாம் என்று நம்முடைய பிராந்திய சபையாரை அழைத்துச் செல்லும்போதும் இதே ஆபத்துகள் அதாவது பிரிவினைகள் நடக்கின்றன.*

*இப்படி சேகரிக்கப்பட்ட ஆத்துமாக்களை வைத்துக் கொண்டு இன்றைக்கு அநேகர் தங்களை ஊழியர்கள் என்று சொல்லிக்கொண்டு வலம் வருகின்றனர்.* ***இந்த இரண்டு செயல்களுமே தவறானதே!***

**எரேமியாவைப்போல புலம்பும் உங்கள் சகோதரன்,**
**சகோ.இளவரசன் ரீகன், சென்னை.**

# புதிய பிறப்பு பற்றி நாம் ஏன் பிரசங்கிக்றோம்

## Why we Preach The New Birth

*-J.C.Choate*



புதிய - பிறப்பு என்றால் என்ன? இது ஒரு நல்ல கேள்வி உண்மையான விஷயமாக இந்த கேள்வி பலமுறைகள் கேட்கப்பட்டு பல் வேறுபட்ட பதில்கள் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் அதிக மானோர் இது என்ன என்பதை அறியத் தவறினவர்களாகவே இருக்கின்றனர்.

நம்முடைய பிரிவினை சபை நண்பர்கள் ஒரு தனிமனிதன் கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறபோது ஒரு அற்புதமான மாற்றம் அந்த மனிதனின் வாழ்வில் ஏற்படுகிறதே புதிய பிறப்பு என விளக்கமளிக்கின்றனர். ஆனால் இதைக்காட்டிலும் மேலான ஒன்று நிச்சயமாகவே நடைபெறுகிறது.

யோவான் 3-ஆம் அதிகாரத்திற்குத் திரும்புகையில் கிறிஸ்து இந்த புதிய பிறப்பைக் குறித்து பேசுகிறதை அல்லது ஒருவன் கண்டிப்பாக மறுபடியும் பிறக்கவேண்டும் என்பதைக் கேள்விப்படுகிறோம். கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பும் உடன்படிக்கையாகக் கொடுக்கப்படுவதற்கு முன்பும் இந்தக்காரியம் போதிக்கப்பட்டது என்பதை நினைவில் கொள்ளுங்கள். கிறிஸ்துவின் உடன்படிக்கை, அல்லது கிறிஸ்தவம் நடைமுறைக்கு வந்திருந்த போது எது அவசியமாயிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இது போதிக்கப்பட்டது. இது இராஜ்யத்தின் வருகைக்கு முன் அல்லது சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னே போதிக்கப்பட்டது. ஆனால் கர்த்தர் இராஜ்யம் அல்லது சபை ஸ்தாபிக்கப்பட்டது ஒருவன் அதற்குள் சேர்த்துக்கொள்ளப்படும்படிக்கு அவன் மறுபடியும் பிறக்கவேண்டியது அவசியம் என்று கூறினார்.

ஆனால் நாம் இந்த புதிய பிறப்பினைக் குறித்து இப்போது வாசிப்போம். வேதவாக்கியம், ‘‘யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு எண்ணப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்து ரபி நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் அதற்கு நிக்கொதேமு ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது அதன் சத்தத்தைக் கேட்கிறாய் ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்திற்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். அதற்கு நிக்கொதேமு இவைகள் எப்படி ஆகும் என்றான். இயேசு அவனை

நோக்கி நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன்; நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை; பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசிவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனே யல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவருமில்லை (யோவா. 3:1-13) என்று சொல்லுகிறது.

முன்னதாக குறிப்பிட்டவற்றிலிருந்து, தயவு செய்து இதன் அமைப்பைக் கவனியுங்கள். நிக்கொதேமு என்னும் பேருள்ள ஒரு மனிதன் இராக்காலத்தில் இயேசுவினிடத்தில் வந்தான். அவன் பரிசேயனாகவும் யூதருக்குள்ளே அதிகாரியாகவுமிருந்தபடியினால், அவன் தன்னுடைய சந்திப்பு ரகசியமாகயிருக்கவேண்டுமென அவன் அந்த நேரத்தில் வந்திருப்பான் என சிலர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். பரிசேயர்கள் யூதமத பிரிவைச் சேர்ந்தவர்களாகயிருந்தனர். அவர்கள் உயிர்த்தெழுதலும், தேவதூதர்களும் உண்டென நம்பினார்கள். யூதர்களுடைய அதிகாரியாக இருப்பதென்பது அவன் ஒரு மூப்பனாகவும் மதிப்பிற்குரிய ஒரு பதவியை உடையவனாகவும் இருந்திருக்கின்றான் என்று அர்த்தமாகிறது. எப்படியாகிலும் இயேசுவினிடத்தில் வருகையில் அவன் அவரிடத்தில் விசுவாசமுள்ளவனாக இருந்தவன் எனக் குறிப்பிடுகிறான், அத்தோடுகூட அவன் இயேசுவினிடத்தில் ரபீ அல்லது போதகர் என்றும் மேலும் இயேசு அற்புதங்களைச் செய்ய வல்லமையுடைய வராயிருக்கிறபடியினால், இது அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதற்கு சாட்சியாக இருக்கிறது எனவும் குறிப்பிடுகிறான். அதற்கு இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தைக்காண, அவன் மறுபடியும் பிறப்பது அவசியமாயிருக்கிறது என்ற திட்டத்தினை அங்கு குறிப்பிடுகிறார். ஆனால் கிறிஸ்து என்ன சொல்லிக்கொண்டிருந்தாரென நிக்கொதேமு அறியாதபடியினால் இது அவனை குழப்பமடையச் செய்தது. பின்பு அவன், ஒருவன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி மறுபடியும் பிறக்கமுடியும் என்பதை அறிய விரும்பினான். அவன் தொடர்ந்து அந்த மனிதன் தன் தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்று கேட்டான். நிச்சயமாக அவன் அவ்வாறு பிறக்கமுடியாது, இயேசுவும் இவ்விதமான அர்த்தத்தில் போதிக்கவும் இல்லை. கிறிஸ்து ஒரு ஆவிக்குரிய பிறப்பினைக் குறித்து பேசிக்கொண்டிருந்தார் ஆனால் நிக்கெதேமு ஒரே பிறப்பினைப் பற்றி அறிந்திருந்தபடியினால் அவன் சரீரப்பிரகாரமான பிறப்பினைக் குறித்து நினைத்துக் கொண்டிருந்தான்.

தொடர்ச்சியாக இயேசு திரும்பவும் புதிய பிறப்பினைக் குறித்து பெரிய விளக்கத்துடன் தெளிவுப்படுத்தினார். ஒருவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு அவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்கவேண்டியது அவசியமாயிருக்கிறதென்றும் இதைத்தவிர அதில் பிரவேசிப்பதற்கு வேறொரு வழியே கிடையாது என்றும் இன்னும் பல வார்த்தைகளின் மூலம் அவனிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஆனால் இந்த வார்தைகளை நாம் இன்னும் கொஞ்சம் அதிகமாக ஆராய்ந்து பார்ப்போமாக, முதலாவது அவர் ஜலத்தினால் பிறப்பது அவசியம் என்று சொன்னதை கவனியுங்கள். பிறக்க வேண்டுமென்பது வரக்கூடிய ஒன்று. ஒரு பிறப்பு என்பது புதியவாழ்வை குறிப்பாகத் தெரிவிக்கிறது. ஆனால் தண்ணீரைப் பற்றிய காரியமென்ன? இயேசு நிக்கொதேமுவுக்கு இரண்டாம் முறை ஒருவன் தன்தாயின் கர்ப்பத்தில் பிரவேசித்து

மறுபடியும் பிறப்பதிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டது என விளக்கினபடியினால் சரீரப்பிரகாரமான பிறப்பிற்கு தண்ணீர் ஒன்றும் செய்கிறதில்லை. நாம் இந்த ''தண்ணீரை குறித்து நினைக்கையில் இன்னொரு விதியையும் நம்முடைய நினைவில் கொள்ள வேண்டும் அதாவது மற்ற எல்லா இடங்களிலும் இது எங்கு பயன்படுத்தப்படுகிறது இது ஆவிக்குரிய தண்ணீரென்றால் அது யோசனை செய்ய வேண்டிய ஒன்று, இது ஜீவத்தண்ணீராகச் சொல்லப்பட்டுள்ளது. அல்லது இது வெளிப்படையான தண்ணீரில்லை என்பதை குறிக்கும் ஒன்றாகும்.

இன்னொரு வகையில் பல வசனங்களில் தண்ணீர் என்ற வார்த்தை காணப்படுகிற இடத்தில் இது வெளிப்படையான அல்லது உண்மையான தண்ணீர் என குறிப்பிடப்படுகிறது. ஆனால் இது பயன்படுத்தப்படும் வழி என்ன? தண்ணீர் என்ற வார்த்தை மட்டும் குறிப்பிடப்படுகையில் நாம் அவர் உண்மையான ஜலத்தைப் பற்றி பேசினார் என்ற முடிவுக்கு வரவேண்டும். இப்போது அடுத்த கேள்விக்குச் செல்வோம். தண்ணீரோடு சம்பந்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட வேதவாக்கியத்தில் நாம் என்ன செய்ய கட்டளையிடப்பட்டுள்ளதாக வாசிக்கிறோம். நீங்கள் கர்த்தருடைய வார்தையை நன்கு அறிந்தவர்களாக இருப்பீர்களென்றால், நீங்கள் அங்கே ஒரே ஒரு கட்டளை அல்லது செயல், அதாவது தண்ணீரோடு சம்பந்தமுள்ளதும் அது ஞானஸ்நானமே என்பதையும் அறிந்துகொள்வீர்கள். அப்போஸ்தலர் 8:26-39-ல் எத்தியோப்பியாவில் இருந்து வந்த ஒரு மனிதன் கிறிஸ்துவைப்பற்றி போதிக்கப்பட்டவனாகி, அதன்பின் தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவனாக இருந்தான் என நாம் வாசிக்கிறோம். இத்தோடுகூட ஒருவன் தண்ணீர் முழுக்கினால் கண்டிப்பாகப் பிறக்க வேண்டுமென கிறிஸ்து சொன்னார்.

ஒருவன் தண்ணீர் முழுக்கினால் எவ்வாறு பிறக்கமுடியும்? நல்லது இங்கே ஞானஸ்நானத்திற்கு தண்ணீர் குறிப்பிடப்பட்டிருக்குமானால் தண்ணீரில் ஞானஸ்நானம் என்பது ஒரு அடக்கம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (கொலோ 2:12), மேலும் தண்ணீரில் அடக்கம் என்றால் பிறகு ஒருவன் அந்த தண்ணீரிலிருந்து வெளியே வரும்போது வெளித்தோன்றுதல் அல்லது ஒரு பிறப்பின் அனுபவம் என்று அர்த்தமாகிறது. மேலும் அப்போஸ்தலர் பவுல் ஞானஸ்நானத்தில் என்ன நடக்கிறது என இங்கே விளக்குகிறார். (ரோம. 6:3,4).


ஜலத்தினால் பிறந்திருத்தல் அல்லது ஞானஸ்நானப்படுத்தப்படுத்தலைப் பற்றி தொடர்ந்து நாம் சிந்திக்கையில், ஒருவன் மறுபடியும் பிறந்திருக்கிறான் அவன் வெளித்தோன்றியிருக்கிறான் அல்லது ஒரு வாழ்வை பெற்றிருக்கிறான் என நாம் நினைவுபடுத்தப்பட்டிருக்கிறோம். மீண்டும் அப். பவுல் ரோமர் 6:3 மற்றும் கலா. 3:26,27-ல் ஞானஸ்நானம் ஒருவனை கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது என சொல்லப்பட்டுள்ளது, மேலும் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறவர்கள் புதிய சிருஷ்டிகளா யிருக்கிறார்கள் என்று நமக்குச் சொல்லுகிறபடியினால் இது தண்ணீரோடு இணைக்கப் பட்டுள்ளது. பவுல், ''இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியா யிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின'' (2 கொரி 5:17) என்றான். கிறிஸ்தவர்களிடம் பேதுரு சொன்னபோது, ''நீங்கள் வளரும்படி புதிதாய்ப்பிறந்த குழந்தைகளைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்'' (1 பேது 2:3) என்றான்.

**உம்முடைய வேதம் சத்தியம் – சங்கீதம் 119:142**

சிறுவர் பகுதி

# தேறின வேதபாரகன்

**வேத பகுதி: எஸ்றா 7:1–10**



இஸ்ரவேலிலே தேறின வேதபாரகனாக எஸ்றா இருந்தான். இவன் பிரதான ஆசாரியனான ஆரோனின் குமாரன். இன்றைக்கு பார்த்தீர்களென்றால் கிறிஸ்தவ ஊழியரின் மகன் மிகப் பெரிய, பெரிய வேலைகளில் இருக்க வேண்டுமென்று முயற்சி எடுக்கிறார்கள். ஆனால் எஸ்றாவோ அப்படியில்லை தன் தகப்பனுடைய வழியிலேயே அவன் ஒரு சிறந்த வேதபாரகனாக இருந்திருக்கிறான். தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான். இப்படி அவன் இருந்தபடியால் கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்தது. அதுமட்டுமா? அர்த்தசஸ்டா என்ற ராஜா அவன் கேட்டதை எல்லாம் கொடுத்தார். எப்படி அவன் கேட்டதை எல்லாம் கொடுத்திருப்பான். அந்த அளவுக்கு எஸ்றா, ராஜாவின் பார்வையில் மிக நல்லவனாகவும், கர்த்தருக்கு பயப்படுகிறவனாகவும் இருந்தபடியால் தேவன் ராஜாவின் கண்களில் கிருபை கிடைக்கும்படி செய்திருக்கிறார்.

நாம் ஆண்டவருக்கென்று ஊழியம் செய்யும்போது சகல ஜனங்களிலும் நமக்கு கிருபை கிடைக்கும்படி செய்வார். காரியங்களையும் கைகூடிவரச் செய்வார். இவையெல்லாம் நன்கு அறிந்த எஸ்றா சகலத்தையும் பெற்று அனுபவித்தான். நீங்களும் இந்த எஸ்றாவைப்போல வேதாகமத்திலும் ஆண்டவருடைய கட்டளைகளை மனப்பாடம் செய்வதிலும் அவைகளை கைக்கொள்வதிலும், தேர்ச்சி அடைவீர்களா? அப்படி தேர்ச்சி அடைவீர்கள் என்றால் கர்த்தர் எஸ்றாவோடு இருந்தது போல உங்களோடும் இருப்பார்.

மேலும், எஸ்றா கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதன்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும், நீதி நியாயங்களையும், உபதேசிக்கவும், தன் இருதயத்தை பக்குவப்படுத்தி இருந்தான். கர்த்தருடைய வேதத்தை கேட்கிற நாம் அதை குறித்து அசட்டையாக இருக்கலாமா? அநேகர் பாருங்கள் பிரசங்கியார் பிரசங்கிக்கும்போது அடுத்தவனை கூப்பிடுவது, அடுத்தவனை கில்லி வைப்பது மேலே எதையாவது பார்த்துக்கொண்டு இருப்பது. இப்படியெல்லாம் செய்யலாமா? கூடாதே! பெரோயா பட்டணத்தார்களைப்போல வேதத்தை ஆராயவும், அதன்படி செய்யவும் முயற்சிக்கவேண்டும். புதையல்களை தேடுகிறதுபோல தேடினால் தானே ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கமுடியும். அப்படிச் செய்வீர்களா? எஸ்றாவைப் போல வளருங்கள் கர்த்தர் உங்களோடு இருப்பார். இந்த ஆண்டில் இப்படி செய்வீர்களாக!

**மனப்பாட வசனம்:**

"கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி, நியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தான்" (எஸ்றா 7:10)

## நான் யார்? – Who Am I?



- இது என்னுடைய ரோம பெயர்
- எங்களுடைய வீட்டிலே ஜெபக்கூட்டம் நடந்தது
- நான் பவுலோடு சிறைச்சலையில் இருந்தேன்
- நான் பர்னபாவுக்கு இனத்தான்
- புதிய ஏற்பாட்டில் ஒரு புத்தகம் எழுதியுள்ளேன்
- ஒரு அப்போஸ்தலன் என்னை என் குமாரன் என்று எழுதியுள்ளார்
- நான் எழுதிய புத்தகத்தில் இயேசுவின் கட்டளையை கடைசியில் எழுதியுள்ளேன்

## வேத அறிவுப்போட்டி 266-ன் விடைகள்

1. நாற்பது நாள் - யாத்.24:18
2. பதினெட்டுப்பேரை - லூக்.13:4
3. பேய்களுக்கு - லேவி.17:7
4. பிலாத்து - யோவா.19:22
5. கூடாது - எண்.35:30
6. நானூறுபேர் - அப்.5:36
7. நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே-உபா.29:29
8. ஒளியின் ஆயுதங்களை - ரோம.13:12
9. யோசுவா - யோசு.8:32
10. கிறிஸ்துவே - 1கொரி.1:31

### சரியான பதில் எழுதியவர்கள்

1. Mrs. ஃபுளோரா சுந்தர் - மதுரை
2. J. மேரிஜெயக்குமார் - மதுரை
3. Mrs. பியூலா ஜேசுரத்தினம் - புதுச்சேரி
4. Mrs. நிர்மலா ஆபிரகாம் - மதுரை
5. Mrs. ரூபவல்யா - நாசரேத்
6. D.A. கமலம் - காரைக்குடி
7. Mrs. வசந்தா ரபீந்திரன் - தூத்துக்குடி
8. Mrs. பாலின்மார்ட்டின் - காரைக்குடி
9. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
10. Mrs. ஆலிவ்ஜெயபாலன் - கோவை
11. K. ராணிமூர்த்தி - திருநெல்வேலி
12. A. ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
13. A. டேவிட் - மதுரை
14. R. ஞானசிரோன்மணி - மதுரை
15. M. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
16. R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
17. Mrs. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
18. J. செல்வராஜ் - தூத்துக்குடி
19. S. ஜாய் சந்திரகாந்தா - தூத்துக்குடி
20. Mrs. கிரேஸ்மோசஸ் - பாளையங்கோட்டை
21. Mrs. சந்திராஆல்பர்ட் - திருநெல்வேலி
22. Mrs. ஜெனிதர்மராஜ் - திருநெல்வேலி
23. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
24. Mrs. ஹெத்சி செல்வின் - சென்னை
25. S. அன்னம்மாள் - தூத்துக்குடி
26. J.S. ஜெயாமேரித்தாய் - திண்டுக்கல்
27. S. சாந்தகுமாரி - நாசரேத்
28. Mrs. ராஜம்மாள் - பெங்களூர்
29. T. ராஜாத்தி - கோம்பை
30. Mrs. தேவிராஜசிங் - திருப்பூர்
31. Mrs. தங்கபுஸ்பம் - நாசரேத்
32. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
33. S. அசோக்குமார் - தூத்துக்குடி
34. B. ஸ்டெல்லா - கூத்தூர்
35. Mrs. ரூத்ஜெராணி அன்புராஜ் - திருநெல்வேலி
36. Mrs. ஃபிளாரான்ஸ் சித்தர் - சென்னை
37. D. விஜயா காந்தி - வேலூர்
38. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
39. C. அருள்ராஜ் - சென்னை
40. Mrs. ஃபிராங்களினா ஜான் - ஊட்டி
41. Mrs. ஜான்சி - ஆனைமலை
42. E. அதிசயம் - பனைகுடி
43. E. சூசன்னா ஃபிராங்கலின் - ஒசூர்
44. K.M. சாந்தி - எம்.வாடிப்பட்டி

## வேத அறிவுப்போட்டி 267-ன் விடைகள்

1. சிம்சோன் - நியா.16:22
2. பவுல் - 2கொரி.9:15
3. ரூத் - ரூத் 2:18
4. பவுல் - கலா.2:2
5. சவுல் - 1சாமு.14:52
6. பவுல் - எபே.4:20
7. சீமேயி - 2சாமு.16:7
8. சரி - பிலி.2:5
9. ஆம் - 1இரா.4:30
10. ஆம் - கொலோ.4:10

### சரியான பதில் எழுதியவர்கள்

1. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
2. Mrs. ரூபவல்யா - தூத்துக்குடி
3. R. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
4. R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
5. A. ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
6. Mrs. ஹெத்சி செல்வின் - சென்னை
7. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
8. Mrs. வசந்தா ரபீந்திரன் - தூத்துக்குடி
9. K.M. சாந்தி - எம்.வாடிப்பட்டி
10. A. டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
11. D. அன்புக்கமலம் - காரைக்குடி
12. Mrs. சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
13. Mrs. சந்திராஆல்பர்ட் - திருநெல்வேலி
14. Mrs. ஜேன் தர்மராஜ் - திருநெல்வேலி
15. Mrs. பாலின்மார்டின் - காரைக்குடி
16. Mrs. சாந்தகுமாரி - நாசரேத்
17. R. ஞானசிரோன்மணி - மதுரை
18. J. பிச்சை - விருதுநகர்
19. C. அருள்ராஜ் - சென்னை
20. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
21. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் - திருநெல்வேலி
22. T. ராஜாத்தி - கோம்பை
23. Mrs. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
24. S. அன்னம்மாள் - தூத்துக்குடி
25. J. செல்வராஜ் - தூத்துக்குடி
26. J. ஆலிவ் - கோவை
27. Mrs. மேரி நிர்மலா ஆபிரகாம் - மதுரை
28. S. ஜாய் சந்திரகாந்தா - நல்லூர்
29. Mrs. ஃபுளோரா சுந்தர் - மதுரை
30. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
31. Mrs. பியூலா ஜேசுரத்தினம் - புதுச்சேரி
32. R. பாரதி - கோபி
33. D. விஜயகாந்தி - வேலூர்
34. Mrs. ஜெயாபாணி ஜெபராஜ் - மேற்கு தாம்பரம்
35. Mrs. ஃபிராங்களினா ஜான் - ஊட்டி
36. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
37. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
38. Mrs. இளவரசி ஜோபிதா சுந்தரராஜன் - கோவை
39. A. இம்மானுவேல் என்ற விக்டர்பாபு - ஈரோடு
40. Mrs. கிரேஸ் மோசஸ் - பாளையங்கோட்டை

வேதம் எனது செல்வம்
வேதம் எனது ஆசான்
வேதம் எனது வெளிச்சம்
வேதம் எனது வழிகாட்டி





வேதம் எனது சொந்தம்
வேதம் எனது நேசம்
வேதம் எனது காவல்



# ப.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters
## 11



## பரிசுத்த வேதாகமத்தில் ஏசா
## Esau In The Holy Bible

| | |
|---|---|
| 1. ஈசாக்கின் மூத்தவன் ரோம அங்கிபோர்த்தவன் | - ஆதி.25:25 |
| 2. ஏசா வேட்டையில் வல்லவன் | - ஆதி.25:27 |
| 3. தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்டான் | - ஆதி.25:33 |
| 4. யாக்கோபை கொன்றுபோடுவேன் என்றான் | - ஆதி.27:41 |
| 5. இஸ்மவேலிடத்தில் விவாகம்பண்ணினான் | - ஆதி.28:9 |
| 6. ஏசாவினுடையவைகள் தேடிப்பார்க்கப்பட்டது | - ஒப.6 |
| 7. ஏசாவின் வம்சத்தார் துரும்பாயிருப்பார்கள் | - ஒப.18 |
| 8. கர்த்தர்: நான் ஏசாவை வெறுத்தேன் என்கிறார் | - ரோம.9:13 |
| 9. ஏசாவைப்போல சீர்கெட்டுப்போய்விடகூடாது | - எபி.12:16 |
| 10. ஏதோம் பாழாகும் | - எரே.49:17 |

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**ஏசாவுக்கு மற்றொரு பெயர் என்ன?**

**விடை:** ஏதோம் - "ஏசா சேயீர்மலையில் குடியேறினான்; ஏசாவுக்கு ஏதோம் என்றும் பேர்" (ஆதி.36:8)



பு.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

12



### பரிசுத்த வேதாகமத்தில் மத்தேயு
### Matthew In The Holy Bible

1. இவன் 12 அப்போஸ்தலர்களில் ஒருவன் - மத்.10:3
2. இவன் ஒரு ஆயக்காரன் (வரிவசூலிப்பவன்) - மத்.10:3
3. ஆயத்துறையின் வேலையை விட்டு பின்சென்றான்- மாற்.2:14
4. இவனுக்கு மற்றொரு பெயர் லேவி - லூக்.5:27
5. இயேசுவுக்கு பெரிய விருந்துபண்ணினான் - லூக்.5:29
6. ஆபிரகாம் துவங்கி வம்சவரலாறு எழுதினான் - மத்.1:1
7. இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் அப்போஸ்தலர்கள் கூடி கூட்டத்தில் இருந்தான் - அப்.1:13
8. கலிலேயன், கப்பர்நகூம் ஊரான் - மாற்.2:1,13,14
9. கலிலேயர் அவரை ஏற்றுக்கொண்டார்கள் எனவே இவனும் ஏற்றுக்கொண்டான் - யோவா.4:45
10. தூதர்கள் கலிலேயராகிய மனுஷரே என்றனர் - அப்.1:11

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**பரலோகராஜ்யம் இவைகளுக்கு ஒப்பாயிருக்கிறது என்று 3 உவமைகளும், இயேசு செய்த அற்புதங்கள் இரண்டும் மற்ற சுவிசேஷ புத்தகத்தில் சொல்லப்படாதவைகள் மத்தேயு புத்தகத்தில் எந்த அதிகாரத்தில் இருக்கிறது?**

**விடை:** மத்தேயு 13 மற்றும் 9ம் அதிகாரத்தில் இருக்கிறது.



**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



***தற்சோதனை பகுதி – 51***

**51. அன்பு ஒருக்காலும் ஒழியாது ஏன் ?**

1. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது ☐ வசன ஆதாரம் -
2. எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருக்க முடியாது ☐ வசன ஆதாரம் -
3. அன்புக்கு பொறாமையில்லை ☐ வசன ஆதாரம்-------------------
4. பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட முடியாது ☐ வசன ஆதாரம் ----------------------------------------------------
5. அன்பு தன்னைப் புகழாது ☐ வசன ஆதாரம்-------------------
6. தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படமாட்டான் ☐ வசன ஆதாரம்-
7. அயோக்கியமானதைச் செய்யாது ☐ வசன ஆதாரம்-------------------
8. ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமல்ல ☐ வசன ஆதாரம்-
9. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம் ☐ வசன ஆதாரம்-
10. நாம் சொல்லும் தீர்க்கதரிசனம் நிறைவுள்ளது ☐ வசன ஆதாரம்-

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

*கவலை என்பது*
*உன்னால் மாற்றமுடியாதவற்றைப் பற்றி*
*உனக்குள் கொண்டிருக்கும்*
*ஒரு உரையாடல்*

Worry is a conversation
you have with yourself
about things you
cannot change

*ஜெபம் என்பது*
*அவரால் மாற்றமுடியும் என்பதைப் பற்றி*
*தேவனோடு நீ கொண்டிருக்கும்*
*ஒரு உரையாடல்*

Prayer is a conversation
you have with God
about things
He can change

‘ஒரே வழி’ தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**


**வேதவாக்கியங்களின்படி**
**கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு**

Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

**பாடம் – 31**

**சபையின் ஆளுகை முதலாவதாக எவ்வாறு சீர்கேடானது?**




**வரை குறிப்பு**

**1. விலகிப் போகுதலை குறித்து வேதாகம முன்னுரைத்தல்கள்**

**2. சபை சரித்திரத்திலிருந்து பாடங்கள்**

**3. உண்மையில்லாத மேய்ப்பர்கள் மேல் சாபங்கள்**

**கலந்துரையாடல்**

**1. விலகிப் போகுதலை குறித்து வேதாகம முன்னுரைத்தல்கள்**

சபையின் வடிவமைப்பைக்குறித்து படிப்பதற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. முதலாவது விலகிச் செல்லுதல் என்பது சபையின் ஆளுகையிலே வந்தது. தற்போது இந்த பாடமானது இந்த சீர்கேடுகள் எவ்வாறு வந்தன என்பதை வெளிப்படுத்தும். வேதாகம முன்னுரைத்தல்களில் முதலாவதாக விழுந்து போகுதல் வரும் என்பதை நாம் காண்கிறோம். அப்போஸ்தலாகிய பவுல் எபேசுவிலிருந்து வந்த மூப்பர்களுக்கு கொடிய ஓநாய்கள் உட்பிரவேசித்து மந்தையை கெடுத்துப் போடும் என்று எச்சரித்தார். மேலும் இவர்கள் கள்ளப்போதகர்களாயிருந்து தங்களை பின்பற்றும்படியாக இழுத்துக் கொள்வார்கள் (அப்.20:29-30). சபையானது கள்ளப்போதகர்களால் கெடுக்கப்படும் என்பதற்கான தீர்க்கதரிசனமாக இது இருந்தது. "உங்களிலும் சிலர்" என்று பவுல் கூறியது முக்கியமானதாக இருக்கிறது. இந்த கள்ளப்போதகர்கள் எழும்புவார்கள். விசுவாச வீழ்ச்சியானது சபைகளிலிருந்து தொடங்கும். மூப்பர்கள் அல்லது வழிநடத்துகிறவர்கள் மத்தியில் இருந்து தொடங்கும் என்பதை இது குறிப்பிடுகிறது. 1தீமோ.4:1-4 வசனப் பகுதியானது மனுஷர் விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் என்பதை குறித்த மற்றொரு எச்சரிக்கையாக இருக்கிறது. மீண்டும் கள்ளப்போதகர்களால் விழுந்து போகுதல் வருமென்று அவர்களே அதற்கான வழிகளாக இருப்பார்கள் என்றும் கள்ளப்போதகர்களைக் குறித்து குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1கொரி.1:10-13 வசனங்களில் பிரிவினைகள் கொரிந்து பட்டணத்து சபையில் ஏற்கெனவே தொடங்கியிருந்தது என்பதை நாம் காண்கிறோம். இந்த பிரிவினைகள் கிறிஸ்துவை மாத்திரம் பின்பற்றுவதற்குப் பதிலாக தங்களுக்கு முன்னோடிகளாயிருந்தவர்களைப் பின்பற்றிய சபை அங்கத்தினர்களால் வந்தன. பிரிவினையும் கேடுபாடும் சபைக்கான வழிநடத்துதலுக்கு தொடர்புடையவைகளாயிருந்தன.

மற்றொரு எச்சரிக்கையாக 2தெச.2:3,4 வசனங்கள் ஒரு விசுவாச வீழ்ச்சியும், பாவமனுஷன் வெளிப்படுதலும் வருமென்று சொல்கிறது. தேவனுடைய ஆலயத்தில் ஒருவன் தேவன்போல உட்கார்ந்திருப்பதையும் தன்னைத்தான் தேவனாக காண்பிப்பதையும் இது சொல்லியது. விசுவாசத்தை விட்டு இவ்விதமான விலகுதல்கள் தேவபக்தியற்ற வழிநடத்துகிறவர்களாலும், சபையிலிருந்த சிலராலும் சபைக்கு புறம்பேயிருந்த மற்றவர்களாலும் நடைபெற காரணமாயிருந்தது. சபையை வழிநடத்துதல் என்பது சபையானது பரிசுத்தமாக இருந்த வரையில் அது விழுந்து போகவில்லை. ஆனால் மூப்பர்களும் போதகர்களும் தேவனுடைய வார்த்தையில் இருந்தும் சபையின் அமைப்பை குறித்து தேவனுடைய திட்டத்தில் இருந்தும் விலகியபடியால் கெடுதியானது சீக்கிரமாக வந்தது. வழிநடத்துதலுக்கு தொடர்புடையதாயிருக்கிற விலகுதல்களை குறித்து வேதாகமம் முன்னுரைத்தது இன்றைக்கு இருக்கிற பிரிவினைகளும் கள்ளப்போதனைகளும் ஏற்படுத்துகிற பயங்கரமான விளைவை நாம் காண்கிறோம்.

**2. சபை சரித்திரத்திலிருந்து பாடங்கள்**

வேதாகமமானது ஆசியாவிலிருந்த ஏழு பிராந்திய சபைகளைப் பற்றிய ஒரு காட்சியுடனே நிறைவு பெறுகிறது (வெளி.1,2,3). இவைகளில் பெரும்பாலான சபைகள் முன்னுரைக்கப்பட்ட முந்திய தீர்க்கதரிசனங்கள் எழுதப்பட்டபடியே விசுவாச துரோகம் செய்தன. ஆனால் நாம் தொடர்ந்து கற்றுக் கொள்கிறபடியே, வேதாகமம் நிறைவாகி முடிந்த பின்பும் கூட மேலும் விழுந்து போகுதலை குறித்த எச்சரிக்கைகள் நிறைவேறின. பிசாசானவன் கிறிஸ்தவர்களை "கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி" கெடுத்துப் போடுகிறான் என்று வேதாகமம் எச்சரிக்கிறது (2கொரி.11:3). கர்த்தருடைய சபையின் வடிவமைப்பிலே சந்தேகத்திற்கிடமின்றி நடந்தது. மனுஷர்கள் தேவனுடைய தெளிவான திட்டத்துடனே திருப்தி உடையவர்களாக இருக்கவில்லை. அவர்களுடைய பண ஆசை மற்றும் முன்னுரிமையைக் குறித்த வாஞ்சையின் காரணமாக வேதாக ஏற்பாட்டுடனே கூட்டி மற்றிப்போட்டார்கள். பின் வரும் பாடங்களின் பட்டியலானது சபை சரித்திரத்தை குறித்ததாக இருக்கிறது.

சபையின் ஆளுகை அமைப்பில் ஏற்பட்ட படிப்படியான கேடுபாடுகளை நாம் கூர்ந்து கவனிக்கிறோம். 1. முதலாவத விலகுதல்கள் மத்தியிலே சபையின் ஆளுகை அமைப்பை விட்டு விலகுதல்கள் இருந்தன. தலைமை வகிக்கும் நிலையில் இருந்தவர்கள் தேவனுடைய வழியை விட்டு விலகியபடியால் அநேகமான பிழைகள் எளிதாக உள்ளே கொண்டுவரப்பட்டன. 2. விலகிய பலரின் எண்ணங்கள் நன்மையானவை களாயிருந்தன. அவைகள் விழுந்து போவதை குறிப்பிடவில்லை ஆளுகை செய்யும் திட்டத்திலுள்ள அவர்களுடைய மாற்றங்கள் மேன்மையானதாகயிருக்கும் என்றும் அவர்கள் எண்ணினார்கள்.. ஆனால் அவைகள் மனுஷனுடைய வழிக்காக தேவனுடைய வழியில் மாற்றம் செய்து கொண்டன.3. ஆரம்ப காலங்களில் வழியை விட்டு விலகுதல் என்பது மிகவும் குறைவானவைகளாக இருந்தன. வழக்கமாக இது உண்மையாயிருக்கிறது. மனுஷர் "வழி தேவனுடைய திட்டத்தை விட்டு மெதுவாக விலகிச்" சென்றார்கள். ஆனால் இன்னும் இன்றுவரை வழிவிலகிச் சென்று கொடிருக்கிறார்கள். 4. ஒரு முறை வழியை விட்டு விலகுதல்கள் ஆரம்பித்து மற்றவர்கள் அதை அத்தியாவசியமாக பின்பற்றினார்கள். ஒரு சிறிய கதவு திறக்கப்படுகிறது திரள் கூட்டமாக ஜனங்கள் அவசரமாக உட்பிரவேசிக்கிறார்கள் என்பதைப்போன்று இது இருக்கிறது. 5. பிராந்திய காலத்தில் வழியை விட்டு விலகியதை நியாயப்படுத்தும்படியாக ஏற்கனவே வழி விலகியவர்களால் வாக்குவாதங்கள் செய்யப்பட்டன. மனுஷர்கள் சொல்லுவார்கள் அவர்கள் ஒரு காரியத்தை செய்தபடியினாலே அவர்கள் இன்னும் அதிகமாய் செய்தோம் என்று. 6. எந்த மாபெரும் அல்லது பெரிய மாறற்ங்களும் சீக்கிரமாக செய்யப்படவில்லை ஆனால் சிறிய மாற்றங்கள் படிப்படியாக சேர்க்கப்பட்டன. ஒரே சமயத்தில் நடைபெறும் கேடுபாடுகள் அனைத்தையும் மனுஷர் காண முடியும். ஆனால் சிறிய மாற்றங்கள் மேலோட்டமாக பார்க்கப்படுகின்றன. நீண்டகாலத்திற்கு மேலாக அவைகள் உற்று நோக்கப்படாமல் இருக்கின்றன. மூப்பர்களுக்கு சமமான அதிகாரம் இருப்பதில் மனுஷர் திருப்தியடையாதவர் களாயிருந்தார்கள் அவர்கள் உடனே "மாநகர மூப்பர்களையும்" பின்பு "தலைமை மூப்பர்களையும்" தேர்வு செய்தார்கள். 8. மனுஷர்கள் ஒரே ஒரு சபையில் மாத்திரம்ஆளுகையுடையவர்களாயிருப்பதில் திருப்தி அடையாதவர்களாயிருந்தார்கள். அவர்கள் விரைவாக பல பிராந்திய சபைகளை ஒரு மூப்பருடைய ஆளுகையின் கீழ் ஒன்றுபடுத்தினார்கள். 9. பலம் வாய்ந்த சபைகள் புதிய மற்றும் பலவீனமான பிராந்திய சபைகளின் மேல் கண்காணிப்பு செய்யவிரும்பின. 10. கல்வி கற்ற மனுஷர் சபைகளில் இருந்த போதும் மனுஷர்களுக்காக முடிவுகள் செய்ய விருப்பம் கொண்டவர்களாக இருந்தார்கள். 11. முன்னோடிகள் சாதாரண அங்கத்தினர்களிடமிருந்து முன்னுரிமை பெற்றுக் கொள்ள விரும்பி "கிறிஸ்தவ மத குருமார்கள் குழு" மற்றும் "பாமர மக்கள்" என்ற பிரிவுகள் தொடங்கினார்கள். இந்த பதங்கள் வேதவாக்கியங்களின் படியே அல்லாத பதங்களாக இருக்கின்றன.. 12. வேதவாக்கியங்கள் கடினமானவைகளாக எண்ணப்பட்டு வினாவிடை மூலம்

சமயத்துறையின் போதனா முறைகள் அவைகளை விளக்கும்படியாக எழுதப்பட்டன. இந்த போதனா முறைகள் சீக்கிரமாக வேதாகமத்துடனே கூட சமமான அதிகார முடையவைகளாக ஆக்கப்பட்டன. 13. அங்கத்தினர்கள் எவைகளை எல்லாம் விசுவாசிக்க வேண்டும் என்பதற்கு வழக்கமாக மூப்பர்களுடைய கூட்டங்கள் தீர்மானங்களை இயற்றின. அவர்களுடைய முடிவுகளும் கருத்துக்களும் சபைகளுக்கு மேலாக விதிக்கப்பட்டு சபைகள் கட்டுப்படுத்தப்பட்டன. 14. சபையின் ஆளுகையானது தேசத்தின் ஆளுகையுடனே கலந்து குழப்பமாகியது. சபையானது இவ்விதமாக அதனுடைய ஆவிக்குரிய ஸ்தானத்தை இழந்து ஒரு அரசியல் சக்தியாக மாறியது. அதற்கு பின்பு மாநிலத்தின் அநேக கேடுபாடுகள் சபையிலே வந்து சேர்ந்தன. இவைகள் சபையின் நேர்மையான ஆளுகை அமைப்பை கெடுத்துப்போடுகின்ற பிசாசின் வழி முறைகளில் சிலவாக இருக்கின்றன. வேதாகமத்தின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறி இருக்கிறபடியால் அவற்றை விட்டு இவர்கள் விலகியிருக்கிறதை நாம் காணமுடியும். இன்றைக்கு இருக்கிற பிரிவினை மார்க்க கூட்டங்களில் ஏற்பட்டு இருக்கிற பிழைகளில் இப்படிப்பட்ட வழி விலகல்கள் இன்னும் கூடுதலாக நடைபெற்றன என்பதை நாம் தொடர்ந்து காண இருக்கிறோம்.

**3. உண்மையில்லாத மேய்ப்பர்கள் மேல் சாபங்கள்**

முந்தியபாடங்கள் நமக்கு மதிப்பு மிக்கவைகளாயிருக்கிறபடியால் இன்றைக்கு இருக்கிற சபையின் முன்னோடிகள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஆரம்ப காலத்தில் முன்னோடிகளாயிருந்தவர்கள் செய்த அதே தவறுகளை இவர்கள் செய்ய வேண்டாம். ஜனங்களுக்கு மேய்ப்பர்களாக இருந்தவர்கள் உண்மையில்லாதவர்களாயிருந்தபடியால் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட சாபங்களை கூர்ந்து கவனியுங்கள். இன்றைக்கு உண்மையில்லாவர்களாயிருக்கிற மேய்ப்பர்களுக்கு வரும் ஆபத்துக்கள் எவ்வளவு பெரிதானதாய் இருக்கும். "என் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார். இதோ, நான் உங்கள் பேரில் உங்கள் செய்கைகளின் பொல்லாப்புக்கேற்ற தண்டனையை உங்கள் மேல் வருவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே.23:1,2). பலம் பொருந்திய முன்னோடிகள் சபையை மற்றொரு வழி விலகுதலில் இருந்து காத்துக் கொள்ளமுடியும். பலவீனமான முனனோடிகள் அவ்வாறு செய்ய மாட்டார்கள். தேவன் தம்முடைய ஜனங்களை வழிநடத்துகிறவர்கள் மேல் ஒரு கனம் பொருந்திய பொறுப்பை வைத்திருக்கிறார். ஆனால் அவர் மகிமை பொருந்திய ஆசீர்வதங்களை உண்மையுள்ள மூப்பர்களுக்கு அளித்திருக்கிறார். 1பேது.5:4 மந்தையை சரியாக கண்காணிப்புச் செய்கிறவர்களுக்கு "பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" என்று வாக்குப்பண்ணியிருக்கிறது. "நம்முடைய ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்திலிருந்து எப்பேர்பட்ட ஒரு மகிமையான பலனைப் பெற்றுக்கொள்வோம்" (1பேது.2:25). அது ஒரு மகிமையுள்ள வாடாத கிரீடமாயிருக்கும்.

**கேள்வி**

1. விலகிப்போகுதல்களை குறித்து முன்னுரைக்கும் அல்லது விவரிக்கும் 4 வசனக்குறிப்புகளை வரிசையாக எழுதவும். ---------- -------------- ------------- ----

2. ------- விலகுகிற பொழுது, சபையானது வழிவிலகிச் செல்கிறது.

3. பிசாசானவன் மனுஷரை கிறிஸ்துவைப் பற்றிய ---- விலக்கிப்போடுகிறான்.

4. சபை ஆளுகையின் வழி விலகல்கள் ----- இருந்தன

5. விலகுதல்களுக்கான தொடக்கங்கள் --------- இருந்தன.

6. --------பலரின் ------- நன்மையானவைகளாக இருந்தன.

7. "கிறிஸ்தவ மத குருமார்கள் குழு" மற்றும் "பாமரமக்கள்" என்பவைகள் வேதாகம வார்த்தைகளாக இருக்கின்றனவா? ----------

8. --------- ஆளுகையானது ------ ஆளுகையுடனே கலந்த குழப்பமாகியது.

9. எந்த பழை ஏற்பாட்டு வசனப்பகுதியானது உண்மையற்றவர்களாயிருந்த மேய்ப்பர்களை சபிக்கிறது?---------

10. எந்த வசனப்பகுதி உண்மையுள்ள மூப்பர்களுக்கு மகிமையை வாக்குத்தத்தம் செய்திருக்கிறது?

# ஜெபம் பண்ணுகிறபோது ஸ்திரீயானவள் தன் தலையை மூடிக்கொள்வது அவசியமா?

பெண்கள் பகுதி

## Is A Woman Required To Cover Her Head While Praying?

*-Betty*



ஸ்திரீயானவள் கண்டிப்பாக ஒரு துணியினால் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும் என்ற போதனையைத் தெரியப்படுத்தும்படி பரிசுத்த ஆவியானவர் சித்தம் கொண்டிருப்பாரென்றால் ஏன் மற்ற வசனங்களிலும் மிக திட்டமான வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை. மாறாக அவர் முக்காடிடுதல் என்ற பதத்தை மாத்திரமே பயன்படுத்தினார் மேலும் ஸ்திரியினது தலைமயிரே முக்காடாகக் கொடுக்கப்பட்டுள்ளது என தெளிவாகக் கூறியுள்ளார். மேலும் அவர் அவளது தலைமயிரானது ஒரு முக்காட்டுத் துணியல்ல அவளுக்கு மகிமையாக இருக்கிறது என விளக்கமளிக்கிறார்.

இதற்கு மாறாக புருஷனுடைய தலை மூடிக்கொள்ளப்பட வேண்டியதில்லை. எல்டர்டு எக்லோஸ் இதுபற்றி “அவன் தலை மூடப்பட்டிருத்தல்” என்பது ஒரு வியாக்கியானமே தவிர இது ஒரு மொழிபெயர்ப்பல்ல என எழுதினார். “அவனது தலையிலிருந்து ஏதோ தொங்கி கொண்டிருத்தல்” என லென்ஸ்கி மொழிபெயர்த்துள்ளது சரியானதாக உள்ளது.

1. கொரிந்தியரைக் குறித்த இவரது வியாக்கியானத்தில் பெட்டன் கோஃப்மேன் கூறுகிறார், விவாதத்தைத் தெளிவுபடுத்தக் கூடிய இந்த கருத்து பின்பு அப்போஸ்தலரால் “புருஷன் தலைமயிரை நீளமாக வளர்க்கிறது. அவனுக்குக் கனவீனமாயிருக்கிறது” (வச.14) என தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது போல தலையிலிருந்து வேண்டிய அளவு நீளமாகத் தொங்கி கொண்டிருத்தல் என்பது “நீளமான தலைமயிர்” என்ற பதத்திற்கு ஒப்பிடப்படுகிறது.

2-ம் நூற்றாண்டில் இதுபற்றி கிளமென்ட் அலெக்சாண்டர் தன்னுடைய கூற்றில் புருஷனுடைய தலைமயிர் நீளமாயிருப்பதைக் குறித்து இவ்விதமாக எழுதுகிறார்; தலைமயிரானது நீளமாக கீழே தொங்கி கண்களை மறைப்பதைபோல வளர்வதில்லை....... கத்தரிக்கப்படவேண்டியதாயிக்கிறது.... ஸ்திரீகள் தங்கள் தலைமயிரை அலங்கரித்துக் கொள்வது போல தலையிலிருந்து பின்னப்பட்டு தொங்கவிடப்படலாகாது”. (Ante Nicene Fathers, Wm B.Eerdmans Publishing Co., லிருந்து குறிப்பிடப்பட்டுள்ளது)

நிச்சயமாக ஸ்திரீயானவளைக் காட்டிலும் புருஷனானவன் தன் தலைமயிரை குட்டையாக அடையாளப்படுத்தி கொண்டிருப்பது உண்மையென சுபாவமே தெளிவுபடுத்துகிறது போல வரலாறு முழுவதும் உலகமுழுவதும் இது பொதுவான உண்மையாகக் கருதப்படுகிறது. இது புருஷன் சிறிதளவுகூட தலைமயிரை வைத்துக்கொள்ளக்கூடாது என பொருள்படுவதில்லை. “நீளம்” என்பது சென்டிமீட்டர் அல்லது இஞ்சில் குறிப்பிடப்படவில்லை. மாறாக, இது நமது உடலின் ஒரு பாகமாயிருக்கிறபடியால் சரீரத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வேறுபாட்டை காண்பிக்க தலைமயிரை நீளமாக வளர்ப்பது உதவியாகயிருக்கிறது.

இந்த பகுதியின் நோக்கம்: புருஷர்கள் ஒரு ஸ்திரீயினுடைய தோற்றத்தை உடையவர்களாய் ஆராதனையில் தமக்கு முன் வந்து தம்மை கனவீனப்படுத்துவதை தேவன் விரும்பவில்லை. ஒரு கிறிஸ்தவ பெண்ணும் நாகரீகமென்று புருஷனைப்போல தன் தலைமயிரை குட்டையாகக் கத்தரித்துப்போட்டு முக்காடிட்டுக் கொள்ளாமல் தன்னுடைய கணவனை கனவீனப்படுத்துவதையும் தேவன் விரும்பவில்லை என்பதை விளக்குவதாகும்.

வேதாகமத்தில் விளக்கப்பட்டுள்ள இந்தக் குறிப்பிட்ட “முக்காடிட்டுக்கொள்ளுதல்” என்ற வினாவானது கலாச்சார வழக்க மாற்றத்திற்கேற்ப

மாற்றப்படுவதற்கில்லை. இது அதிகாரமுடைய தேவனுடைய கட்டளையைச் சார்ந்ததாயும், மேலும் ஸ்திரீ - புருஷன் இவர்களது நடைமுறையும் தோற்றமும், ஆதாம் ஏவாளுடைய காலத்திற்கு அழைத்துச் செல்லு கிறதாகவுமிருக்கிறது.

ஆனால் இங்கே முக்காடிட்டுக் கொள்ளுவது பற்றிய கேள்வி, தன்னுடைய கலாச்சார காலத்திற்கேற்ப மாறக்கூடியதாகவும் பாவமில்லாததாகவுமிருக்கிறது.

தங்களுடைய திருமணத்திற்கு முன் ஈசாக்கு வயல்வெளியிலே வருகிறதை ரெபெக்காள் கண்டபோது, “அவள் முக்காடிட்டு தன்னை மூடிக்கொண்டாள்” என ஆதியாகமம் 24:65 கூறுகிறது. திருமணமாகாத பெண்கள் அடக்கத்திற்கு அடையாளமாக முக்காடிட்டுக்கொள்வது அந்த இடத்தின் கலாச்சார வழக்கம் எனத் தெளிவுபடுத்துகிறது.

இருந்த போதிலும், தாமார் யூதாவை வேசிதனத்துக்கு உட்படுத்த, “...... அவள் தன்கைம்பெண்மைக்குரிய வஸ்திரங்களைக் களைந்து போட்டு (முக்காட்டுத் துணி என தெளிவாக வெளிப்படுத்தபடவில்லை) முக்காடிட்டுத் தன்னை மூடிக்கொண்டு.......” என ஆதி. 38:14ல் நாம் வாசிக்கிறோம். இந்த இடத்தின் கலாச்சார வழக்கத்தில் முக்காடு வேசிக்கு அடையாளமாக மாறியிருந்தது.

“...... அவள் அழகுள்ளவளானபடியால்” (ஆதி. 12:14, 26:7) சாராளும், ரெபெக்காளும் எகிப்து, பெலிஸ்திய ராஜாக்களின் அந்தப்புரத்திற்குள் கொண்டு செல்லப்பட்டார்கள். என வாசிக்கிறோம். அந்நாட்களில் அவ்விடத்து வழக்கம் பெண்கள் முக்காடிட்டுக் கொள்ள வேண்டியது அவசியம் என வலியுறுத்தவில்லை என்பதை என்பதை இது தெளிவுபடுத்துகிறது.

இன்று பெண்கள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் ஒழுக்கமற்ற செயல் அல்லது கணவனுக்கு அவமதிப்பை கொண்டுவரும் செயல் என கலாச்சார வழக்கத்தில் கருதப்பட்டால் கலாச்சார வழக்கத்தைப் புறக்கணிப்பதற்குப் பதிலாக கலாச்சாரத்தை மதிப்பது ஞானமுள்ளதாக இருக்கும் அல்லது தன் கணவனுக்குக் கீழ்ப்படியும் மனைவி என்பதைக் காண்பிக்க வேறு ஏதாவது ‘அடையாளம்’ சமுதாய வழக்கத்தில் இருக்குமானால் அந்த வழக்கத்தை பின்பற்றுவது சிறந்ததாக இருக்கும் அப்படியானால் அவள் “........விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்.” (1 தீமோ 5:14)

இப்பகுதியின் முடிவுரையில் இதுவரையில் பார்த்த எல்லாக் கருத்துக்களையும் மறுபடியும் காண்போம்.

✦ இதன் முழுப்பகுதியும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரக் கட்டளைக்கு ஒத்ததாகவே இருக்கிறது. கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார். புருஷனுக்குக் கிறிஸ்து தலையாயிருக்கிறார். புருஷன் ஸ்திரீக்காக உண்டாகப்பட்டவனல்ல, புருஷனானவன் தேவசாயலும் மகிமையு மாயிருக்கிறான். ஸ்திரீயானவள் புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். புருஷனிலிருந்து தோன்றின வளாயுமிருக்கிறாள்.

✦ இரண்டாவது முக்கியமான கருத்து என்னவென்றால் புருஷனுக்கும் ஸ்திரிக்குமிடையே தோற்றத்தில் வெளிப்படையான அடையாளமிருக்க வேண்டும். புருஷன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவனுக்குக் கனவீன மாயிருக்கிற தென்றும், ஸ்திரீ தன் மயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையா யிருக்கிறதென்றும் சுபாவமே போதிக்கிறது.

✦ ஸ்திரீயினது தலைமயிர் அவளுக்கு துணியாலான முக்காட்டிற்குப் பதிலாக (முக்காடாக) கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஜெபியுங்கள்



✦ புதிய வருடத்தை காணசெய்த தேவனுக்கு நன்றிசொல்லி...
✦ புதிய பெலனையும் உற்சாகத்தையும் பெற்றுக்கொள்ள...
✦ நம்தேசம் நம் ஆண்டவரை அறிந்துகொள்ள...

பெண்கள் பகுதி

# நீங்கள் உயர்த்தப்படவேண்டுமா?

## Should You Be Exalted?

*-Glory Arjunan*

அன்பான சகோதரிகளே இப்புத்தாண்டில் புதுப்பொழிவுடன் இருப்பீர்கள் என்று நம்புகிறேன். கர்த்தர் இவ்வருடத்தை நமக்கு கூட்டிவழங்கியுள்ளார். இவ்வருடத்தில் நீங்கள் உயர்த்தப்பட வேண்டுமா? அப்படியானால் ஒன்று செய்யுங்கள். “மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்” (பிலி.2:3) என்ற அன்பின் கட்டளையை நம் முன் வைக்கிறது பரிசுத்தவேதாகமம். இக்கட்டளையானது கைக்கொள்ளுவதற்குச் சற்றுக்கடினமாயிருக்கலாம். வீட்டிலும் சரி, வேலைபார்க்கும் இடங்களிலும் சரி, ஆவிக்குரிய உலகிலும் சரி, எங்குபார்த்தாலும் ‘பெருமை’ மனமேட்டிமை, அகந்தை போன்ற ஆகாத பிசாசின் குணங்கள் தலைவிரித்தாடுகிறது. கிறிஸ்தவுக்குள்ளிருக்கும் நமக்கு இக்குணங்களைக் கொண்ட ஜனங்கள் மத்தியில் வாழ்வது சிலவேளைகளில் மிகக்கடினமாக இருக்கலாம். கிறிஸ்துவை அறியாத, அல்லது ஏற்றுக்கொள்ளாத மற்றவர்களைக் குறித்து, ஆதியும் அந்தமுமானவர் சொல்லுகிறார்; “அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும் அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்.....” (வெளி.22:11) எனக் கூறும் வேளையில், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய பிள்ளையாய் ஜீவிக்கிற நம்மைப் பார்த்து “.....நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்” (வெளி.22:11) எனக் கூறுகிறார். அன்பு சகோதரியே நாம் உயர்த்தப்படவேண்டுமானால் மற்றவர்களை மேன்மையானவர்களாக எண்ணுவோம்.

இன்று கிறிஸ்தவ வட்டாரங்களில் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட சில வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டு கர்த்தர் என்னை வாலாக்காமல் தலையாக்குவார் கீழாக்காமல் மேலாக்குவார் என உரிமைபாராட்டி அநேக நேரங்களில் ஏமாற்றம் அடைகின்றனர். நிச்சயமாகவே தேவன் நம்மை இவ்விதமாய் உயர்த்த வல்லவர். ஆனபோதிலும் தேவனால் உயர்த்தப்பட வேண்டுமானால் இயேசுவின் அடிச்சுவடை பின்பற்றவேண்டியது அதிமுக்கியமானது. இயேசு நமக்கு மாதிரியை வைத்துச்சென்றார். நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவை நோக்கிப் பாருங்கள். “அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், .......அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி.... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்” (பிலி.2:6-11). இயேசுவானவர் தம்மைத் தாமே தாழ்த்தினார் ஆதலால் தேவனால் உயர்த்தப்பட்டார். நீங்களும் நானும் எவ்வாறிருக்கிறோம்? சற்றே நம்மை நாமே நிதானித்து அறிவோம். மனமேட்டிமை, பெருமை, அகந்தை போன்றவைகள் நம்மிடம் காணப்படுகிறதா? அல்லது மனத்தாழ்மை நம்மில் உள்ளதா? தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் இவ்வுலகத்தில் பிசாசின் பிள்ளைகளுக்கு முன் எப்படி தாழ்ந்து போவது என எண்ணுகிறீர்களா?

அண்டசராசரங்களை உண்டாக்கினவர் தேவனுடைய மடியிலிருந்தவர் தம்மை தாழ்த்தவில்லையா? தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற வசனத்தை நினைவுகூருவோம். மேலும் தேவனுடைய குமாரன் இழிவாய் நடத்தப்பட்டார், துப்பப்பட்டார், ஏளனம்செய்யப்பட்டார். அவரை உயர்த்தின தேவன் அவருடைய பலத்த கைக்குள் அடிங்கியிருப்போமானால் நம்மையும் உயர்த்துவார். இல்லை இது Prestige Issue. என்னால் விட்டுக்கொடுக்கமுடியாதென்றால், நாம் மிகுந்த வேதனைப்பட வேண்டியிருக்கும். நாம் பிடிவாதமாய் இருக்கும்போது வெற்றியைப்பெறுவது கூடாத காரியம். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் (பிலி.2:3). சிலவேளைகளில்

நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்தில் பிரச்சனைகள் வரலாம். நம்முடைய பக்தியின் ஜீவியத்தையும், உண்மையான நடக்கையினையும் உலகத்தார் பார்த்து பொறுக்கக் கூடாமல் பொறாமை கொண்டு நம்மை குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கலாம். அப்பொழுது நம்மால் மனத்தாழ்மையுடன் நடந்துகொள்ளமுடியாமல் நம்முடைய கோபத்தினை வெளிப்படுத்திவிடுவோம். ஆனால் நாமோ கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாக நம்முடைய ஆவியை அடக்குகிறவர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய வசனங்களை நினைவு கூர்ந்து இயேசு வார்த்தையினாலே பிசாசை ஜெயித்ததுபோல நாமும் தேவவசனங்களால் பிசாசின் கிரியைகளை மேற்கொள்ளவேண்டும். நம்மை இவ்வுலகம் வேதனைப்படுத்தும்போது, இயேசுவையும் வேதனைப்படுத்தியது என்பதை நினைத்து பொறுமையோடிருப்போம்.

வேதபாரகர், பிரதான ஆசாரியர், சதுசேயர், பரிசேயர் அனைவரும் இயேசுவை குற்றப்படுத்தும்படியே வகைதேடினார்கள். சிலுவையின் கடைசிபரியந்தமும் ஏளனம் செய்தனர். “மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்” (மத்.27:42-43) ஆனால் இயேசுவோ, “.....பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்...” (லூக்.23:34) முடிவில் என்னநடந்தது? “...தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,.. எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத் அவருக்குத் தந்தருளினார் (பிலி.2:9-11). சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:8) தேவனால் உயர்த்தப்பட்டார்.

அன்பு சகோதரியே, கிறிஸ்துவின் சிந்தை நம்மில் இருக்குமானால், கிறிஸ்துவினிமித்தம் மனத்தாழ்மையாயிருப்போம், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்போம், மேலும் அவருடைய பலத்தகைக்குள் அடிங்கியிருப்போமானால், நாமும் உயர்த்தப்படுவோம். ஆவிக்குரிய பெருமை மற்றும் சரீரத்திற்குரிய பெருமைகளை இப்புத்தாண்டில் நம்மைவிட்டு அகற்றுவோம். “கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்” (யாக்.4:10).

## ஆசிரியர் கடிதம்...

*வாசகர் அனைவருக்கும் நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகள்.*

*புதிய வருடத்தில் தேவன் நமக்குப் புது பெலனைக் கொடுத்திருக்கிறார். பழையவைகளை நினையாமல் புதியவைகளைக் குறித்து பேசுங்கள், சிந்தியுங்கள். எமது ‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ மாத இதழ் உங்களை சத்தியத்திற்கு நேராக வழிநடத்திக்கொண்டிருக்கிறது. இந்த இதழின் ஆசிரியராக நான் இருந்தபோதும் நம் எல்லோருக்கும் ஆசான் நம் ஆண்டவர் இயேசுவே அவருடைய வசனத்தை தொடர்ந்து வெளியிடுவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.*

*நீங்களும் இந்த ஊழியத்தில் பங்குபெறலாம் அதற்கான வழி உங்களுடைய நண்பர் மற்றும் உறவினர்களுடைய முகவரியை எமக்கு எழுதி அனுப்பினால் நாங்கள் அவர்களுக்கும் இவ்விதழை அனுப்பி ஆண்டவர் கிறிஸ்துவின் வசனம் அவர்களுக்கும் கிடைக்க அது உதவியாக இருக்கும். உங்களுக்காக ஜெபிக்கிறோம். நன்றி.*

*அன்புடன் ஆசிரியர்*

# Gospel Preaching On Television

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David
Sunday &Tuesday 7:00 - 7:30 pm & Friday
8.00 - 8.30 pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV


**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:30 pm on Subhavartha Channel
Every Tuesday at 7:30 am on Nireekshana Channel
Every Wednesday at 3:30 pm on Nireekshana Channel
Every Saturday at 6:30 am Aradhana Channel
Every Day at 7.30 am and 3.30 pm on Kanthi TV in A.P Only

**Rajanayagam in Tamil:**
Tuesday 6:30 - 7:00 am on Nambikkai TV
Friday 7:30 - 8:00 am on Nambikkai TV

**Philemon & Kingsley in Tamil & English:**
Every Sunday 7:00 - 7:15 am on Tamilan TV
Every Sunday 3:30 - 4:00 pm on Nambikkai TV
Every Sunday 2:00 - 2:30 pm on Salvation TV

**Amul Bansod - Aurangabad (Marathi):**
MCN News Channel Monday, Wednesday & Friday
7:30 - 8:00 am

**Arjunan in Tamil:**
Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV
Every Wednesday 6:00 - 6:30 pm on Joy TV
Every Sunday 6:00 - 6:30 pm on Heaven TV




**The English Voice of Truth
Book is available
Contact:
P.C.Philemonraja or Kingsley
P.O.Box.15. Arasaradi
Madurai - 625 016
Mobil:92442 04420 / 92442 04421**

**The Voice of Truth
Book in Tamil is available
Contact:
E.Z.Rajanayagam or Bennaimartin
P.O.Box.27. Dharapuram Road
Kankayam - 638 701
Mobil:98427 30382 / 98652 90572**


## வேத அறிவுப் போட்டி எண்: 269

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. அகாஸ்வேருவின் ராஜ்யமெங்கும் இருக்கிற மொர்தெகாயின் ஜனமாகிய யூதரையெல்லாம் சங்கரிக்க வகைதேடினவன் யார்?
2. மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் என்னாவதில்லை?
3. பனித்துளிகளை ஜநிப்பித்தவர் யார்? இந்த கேள்வி யாரை நோக்கி கேட்கப்பட்டது?
4. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் எவராலே ஏவப்பட்டுப் பேசினார்கள்?
5. இஸ்ரவேலர் தங்கள் குமாரரரையும் தங்கள் குமாரத்திகளையும் எவைகளுக்குப் பலியிட்டார்கள்?
6. உலகமும் அதின் இச்சையும் என்னவாகும்?
7. நீதிமானுடைய வாய் எப்படிப்பட்டது?
8. மறைவான மன்னாவை புசிக்கக் கொடுப்பதாக ஆவியானவர் எந்த சபைக்கு சொல்லுகிறார்?
9. பாவியான ஒருவன் எவ்விதமான நன்மையைக் கெடுப்பான்?
10. உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் என்னசெய்யப்படும்?

## வேதாகம ஆய்வு... 53 காலேப் – Caleb



1. எப்புன்னேயின் குமாரன் –எண்.13:6
2. கானானை வேவு பார்த்து வந்து அதை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாம் என்றான் – எண்.13:30
3. உத்தமமாய் கர்த்தரைப் பின்பற்றியவன் – எண்.32:11
4. எபிரோன் அவனுக்கு சுதந்தரமாய் கிடைத்தது – யோசு.14:14
5. சீனாய் வனாந்தரத்தில் எண்ணும்போது காலேபும் யேசுவாவும் தவிர வெறொருவரும் அவர்களில் மீதியாயிருக்கவில்லை – எண்.26:65

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
January 2023

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

## Our TV Program: All Days of the Week




*Every Sunday & Thursday 6.00 P.M on Heaven TV*

*Every Monday & Wednesday 6.00 P.M on Joy TV*

*Every Tuesday & Friday 6.00 P.M on Channel 316 TV*

*Every Saturday 8.00 P.M on Nambikkai TV*

வாரத்தின் ஏழு நாளும்

YouTube : the word of christ

*Cell : 94435 58041*
*6379350509*
*E-Mail arjunanglory@gmail.com*

*Office Address*
***The Word of Christ,***
*D/5 Rajan Nagar*
*Batlagundu -624202,*
*DINDIGUL DIST*
*TAMIL NADU INDIA*

பெண்களுக்கான சிறப்பு புத்தகம் இன்றே வாங்கி பயன்பெறுங்கள்



To

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA




Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan